9th September 1958]

Cauvery water-supply

*116 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) காவிரி தண்ணீரைக் குறைப்பதுபற்றி மைசூர் அரசாங்கம் இவ்வரசாங்கத்தை கேட்டிருக்கிருர்களா ?

(ஆ) அப்படியாளுல் அதன் விபரம் என்ன ?

(இ) நம் அரசாங்கம் அதற்கு அளித்த பதில் என்ன ?

(ஈ) காவிரியில் அதிக ஜல சப்ளை கிடைக்க இவ்வரசாங்கம் என்ன முயற்சி எடுக்க உத்தேசம் ?

THE HON. SRI P. KAKKAN : (அ) இல்லை ஐயா.

(ஆ) இக்கேள்வி எழாது.

(இ) இக்கேள்வியும் எழாது.

(ஈ) போதிய அளவு தண்ணீர் தற்போது காவிரியில் இருக்கிறது. எந்த நடவடிக்கையும் எடுப்பதாக உத்தேசமில்லை.

SRI A. VEDARATHNAM : காவேரித் தண்ணீர் விஷயமாக நம் அரசாங்கத்திற்கும் மைசூர் அரசாங்கத்திற்கும் ஒப்பந்தம் ஏதேனும் ஏற்பட்டிருக்கிறதா ? அப்படியாளுல், அது எப்போது ஏற்பட்டது ? அதன் காலவரையறை என்ன ? அதன் இறுதியில் ஒப்பந்தத்தைத் திருத்தி அமைக்கும் உத்தேசம் அரசாங்கத்தாருக்கு உண்டா ?

THE HON. SRI P. KAKKAN : காவேரித் தண்ணீர் விஷயமாக ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதைத் திருத்தியமைக்க வேண்டுமென்ற உத்தேசம் சர்க்காருக்கு இல்லை.

SRI R. SRINIVASA IYER : காவேரித் தண்ணீரை பெங்களூருக்குக் கொண்டுபோகத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்தது. அப்படி காவேரித் தண்ணீர் பெங்களூருக்குக் கொண்டு போகப்படுமாளுல் அதனுல் நமது ராஜ்யத்திற்கு பாதகம் ஏற்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : நமக்குப் பாதகம் ஒன்றும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளுவோம்.

Misappropriation of funds

*117 *Q.*—SRI S. M. ANNAMALAI AND SRI A. A. RASHEED : கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1956–1957, 1957–1958-ல் வட ஆற்காடு மாவட்டம் வேலூர் அரசாங்க ஆஸ்பத்திரியின் பணம் ஏதாவது கையாடப்பட்டதா ?

(ஆ) அப்படியாளுல், அது சம்பந்தமாய் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under investigation. The loss caused to Government has however been made good. The person mainly responsible for the loss has been removed from service.

SRI S. M. ANNAMALAI : அந்த ஆஸ்பத்திரியில் எவ்வளவு பணம் கையாடப்பட்டது ? அதன் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஏன் இவ்வளவு காலதாமதம் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஐயாயிரத்தி பதினென்று ரூபாய் கையாடப்பட்டது. ரூபாய் திரும்பி வருவதில் காலதாமதம் இல்லை. நடவடிக்கை எடுப்பதில் தான் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. டி.எம்.ஓ.வும் மற்ற அதிகாரிகளும் அந்தக் கையாடல் பற்றி விசாரித்துக் கொண்டிருக்கிருர்கள்.